9 - JUN 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1981 ஏப்ரல் 8.

[பங்குனி 26, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.]

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மையவர் ''

சொற்களின் வகைகள் பலவும் அறிந்த தூய்மையினையுடைய அன்பர், தம்முன்னே உள்ள அவையினரின் இயல்புகளை அறிந்து, அவ்விடத்தில் சொல்லத் தக்கனவற்றை ஆராய்ந்து பார்த்துச் சொல்லுதல் வேண்டும்.

1. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, '' பொதுப் பணி மற்றும் போக்குவரத்துத் துறைகள் குறித்த தமிழ்நாடு அரசின் 1963-64 முதல் 1965-66 வரை மற்றும் 1969-70 முதல் 1971-72 வரையிலான ஆண்டுக் கணக்குகளின் மீதான குழுவின் முந்தைய அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை பற்றிய '' பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை (எட்டாவது அறிக்கை) அவைக்கு அளிக்கிறேன்.

2. வரவு—செலவுத் திட்டம்—1981-82 வாக்கெடுப்பு

(ஆ) கோரிக்கை எண் 18 மருத்துவம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

'' மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,22,09,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, எல்லா மருத்துவ மனைகளிலும் நாய் கடிக்கான மருந்துகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

'' மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 66,22,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. என். எஸ். வி. சித்தன் : Sir, To discuss the need to ease the grave unemployment problem among doctors, I move that the allotment of Rs, 66,22,09,000 under Demand No. 18, Medical be reduced by Rs. 100.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, மருத்துவ மனைகள் செயல்படும் காலதாமதம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

'' மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 66,22,09,000-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. மு. அப்பாதுரை : தலைவரவர்களே, கயத்தாறு அரசு மருத்துவ மனைக்கு புதிய கட்டிடம் கட்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

'' மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,22,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

(ஆ) கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

'' மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,85,55,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, சென்னையில் எல்லா விதமான பொதுச் சுகாதாரம் ஏற்பட மாநகராட்சிக்கு பல வசதிகளைச் செய்து கொடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

'' மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 62,85,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. என். எஸ். வி. சித்தன் : Sir, to discuss the need to fill up the vacancies of doctors at the Primary Health Centress at once, I move that the allotment of Rs, 62,85,55,000 under Demand No. 19,Public Health be reduced by Rs. 100,

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம், வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, வேலூர், இராணிப்பேட்டை தோல் ஷாப்புகளில் இருந்து வரும் கழிவு நீரினால் சுகாதாரம் பாதிக்கப்படுவதை தடை செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—

''மானியக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,85,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, திருத்துறைப் பூண்டி மருத்துவ மனையில் தற்போது உள்ள இரண்டு சுகாதாரத் தொழிலாளர்கள் போதாததால் மேலும் இரண்டு சுகாதாரத் தொழிலாளர்கள் போடுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

'' மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,85,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம், மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள்* அச்சிடப் பெற்று இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவைகளை நான் உரை யாற்றியதாக இந்த அவைக் குறிப்பில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய கருத்துக்களைச் சொன்ன பிறகு, இறுதியில் நான் பதில் கூறுகிறேன்.

---

* 542, 585, 594, 606, 651-ம் பக்கங்களில் இணைப்புகள் I, II, III, IV, V ஆக அச்சிடப் பெற்றுள்ளன.